பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

12
3-74

இஃது,

மதுரை

நாளெட்டில்வென்றானென்றும்

ஸ்ரீகானென்றும்வழங்காணின்ற

முகம்மதுப்புலவரவர்கள்

பாடிய

# காசிம்படைப்போர்.

இதை

பாசிப்பட்டணம்,

ஸ்ரீமுகம்மதுசாகிபவர்கள்குமாரர்

நயினாமுகம்மதுப்புலவரால்

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்கச்

சிந்தாதிரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியா

ரவர்களாற்-றமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பட்டது.

௲௮௱௭௰௪ ௵ - ஜூன் ௴.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது,

# காசிம்படைப்போர்.

காப்பு.

வெண்பா.

திருவாய்த்திருப்பொருளாய்ச்செப்பரியசீராய்
மருவாயமைந்ததிருவல்லாய்-பொருவா
மதயானையைப்பிளக்கும்வல்லரிநேர்காசீம்
கதைபாட நின்னருளேகாப்பு.

கடவுள் துதி.

தொங்கல்.

உலகுநிலையேழுங்கடல்களேழு மும்பரிடமேழு மெவ்வகையும்-இலகுமகுரிலும் படைத்தகோவே இறசூல்முகம்மது திருப்பேரனார்-திலகமெனவரு மலிப்புலியின்-செல்வர் அசனீன்றதிரு மகனார்-கலகமருவாளா வென்றசிங்கக் காசீம்கதைபாடக் காத்தருள்வாய் (௧)

காவல்வயப்புலிதிருப்பேரனார் கருதும்புகழ்காசீம்கதைபாடவே-மேவுமமவாசியிரவுதன்னில்விளங்குபிறைதன்னை யழைத்தேவினோர் கூவுங்குயில் மொழித்தாய்விழியுங்குமரன்கரத்தையும் பொருந்தச்செய்தோர், ஏவல்நபிமார்கள்வேந்தரான வெங்கள் முகம்மதைப்போற்றிசெய்வாம் (௨)

செய்யும்தபிவாசற்படியினின்ற செம்மையாறபூ பக்கரையும் உய்யும்படிசொல்லுமதியுடையவுமறுகத்தாபையும்உதுமானையும்-ஐயந்தனையென்று அலியையுஞ்சீரசனையுமுசைனவர் தமையுந்துய்ய அசுகாபிமார்களையுந் துதிப்போர்மனப்பீடைதொலைந்தோடுமே (௩)

நூற்பயன்.

தொலையாப்பெரும்புகழ்படைத்தகோமான் றங்கப்புலியலி பேரரானார், நிலையாகியவரந் தரித்தகாசீம்நீதிக்கதைதன்னை நிகழ்த்தினோருங்கலையாக்கியவகைபடித்தபேருங்கற்றபேருடன்கேட்டபேரும்- அலையாப்பெருவாழ்வார் சுவர்க்கத்திலேயணங்கனுருடனிணங்குவாரே (௪)

## தியாகமீந்தோர்

இந்தக்கதைதனைத்தமிழ் மொழியாலின்பமாகவே பாடுதற்கு
விற்றைப்பணிற்பொன் மிகக்கொடுத்துவிரும்பித்தலில்செய்து
விளக்கிவைத்த,நந்தின்மழனுஞ்சூழ் வருகைதவாழும் நகுதாசாமி
ஞர் மனாக்காயன்றம்,மைந்தன் குமாரனுமிசுமாயில்கான் வரிசை
மிகப்பெற்றுவாழிதானே (௬)

## ஆக்கியோன் பெயர்.

தானமுதவிய நீதர்காசிச்சங்கைப் படைப்போரைத்தமிழிலே
லேமானமாவொங்கள்சாமினர்சொல்னமாலீனவர்திருமைந்தனும்
நல்-தினைவிரும்பிய இசுமாயீல்கான் செய்யுந்தலில்கொடைச்சிற
ப்பதனால்-ஞானமுறைகூடற்பிருகான் சொல்நாவெட்டில்வெள
ரூன்பாடினனே (௭)

## நூல்வரலாறு.

நல்லநபிதிருவடிசாய்ந்தபின்னுவ்வியார்களுமுறையரசாய்-வ
ல்லவர்நாளுந்தொலைந்தபோதுவரிசை அலியசனரசராகிஎல்கூபு
லகெல்லாமரசாண்டனரெந்தாராஜருந்திறையிடவே வல்லாரிவ்வி
தமிருக்குநாளில்மஆபியாமகன் எசீதெனும்பவன்-மெல்லியொருத்
தியாலசன்பேரிலேவினையைநினைந்தவன்வெகுண்டெண்ணினான்
வெங்கையவிமக்களிருவரையும் வீறினாற்கொல்லப் போகாது
தான்,தாங்கும்புகழசன்றனக்கொருபெண்சரியாகக்கொடுத்திண
க்கமாக்கி,யோங்கும்அசனைமுன் னஞ்சாற்கொன்றேஉசைனைப்
போரிற்பின்கொல்வோமென்று, யாங்கின்மஆபியா மகனெசீதி
ப் பழியையுறுதியாய்நினைந்துகொண்டே (௮)
மன்னும்புகழ்அசன்றமையெசீதுவலியவுறவாடிச்சற்பனையா
ல்,தன்னிலொருபெண்ணைக்கொடுத்தங்கொருதாதிமூப்பியுங்கொ
டுத்தம்மூப்பி-பன்னும்பேர்தனைநிகஞ்செய்யவும்பாம்புங்கீரியு
ம்போலமின்னுள்வன்னமாசனுடன்வாழாமல்வம்புசெய்திடவ
ருத்திவித்தான் (௯)
இந்தச்சாதனை மாயமெல்லாமிறைவன்புலிமகனறியா மலே
சந்தக்குவிழலை மடந்தைமனந்தனக்குப் பொருந்திடார் நிருக்கி
றேம்நா,மெரந்தப்படிக்கிச்சை சொல்வோமென விணக்காத்தா
யுடன்மனஞ்சலித்துப்-புத்திகருணையாய் அல்லாவைத்தான்புகழ்
ந்துதொழுதேத்தியிருந்தனமே. (௰)
இற்றபடிசிலநாட்சென்றபினிடைவளருளிதென் றுளத்திலெ
ண்ணி.மின்னும்வேற்படையாருன் வேட்டையாடிடநாடிப்போ
னார்,அந்தபொழுதினிலெசீதுமன்னனன்றுவிடுமூப்பிதனையழை
த்துக்,கொல்லேயுரையாத அலிமகனைக்கொல்லும்வகைசொல்ல
லுற்றான் (௰௧)

எங்கள்குடிக்கெல்லா மூப்பியரே யெமக்குப்பகையானோன் வேட்டையாடிச்,சங்கையுடன்றிரு மனையில்வந்து தவித்துவிடாய்த் தங்கேயிருக்குநேரம்,நங்கைதனைமனம் நாணாமலே நஞ்சைப்பானக்கந் தனிற்கலந்தே,கொங்கும்புலியலி மகன்றனக்குக்குடிக்கக்கொடுக்கச்சொல் லெனவிடுத்தான் (௰௨)

வடித்தவகையெல்லா மூப்பிவந்து வாழமயிலுடன்சொன்னபோது-இடத்தின்மடந்தையு மிந்தவகை செய்வோமெனவெண்ணியிருந்தாளப்போ,வெடித்தகுழலலி தங்குமாரர் வேட்டையாடியே மீண்டுவந்து,கடத்தின் மணிமேடை தனிலிருந்து தண்ணீர்விடாய்க்குதென் றோதினரோ (௰௩)

ஈதுசொலக்கேட்டு மூப்பிவந்தே எங்களரசரே யலிமகனே-நாதனும்மூட தேவியர்க்கு நம்லமதியினைக் கொடுத்தானிப்போ ஓதுமறைவழிதப்பாமலே யுமதுபெயரிலே தயவாகியே-கோதுபுரியாமற்பானக்கந்தான் கொண்டுவருகிறாள் குடியுமென்றாள்()

உரைத்தமொழிகேட்டங் கலிமகனு ருள்ளமகிழ்ந்துமெய் யுடல் பூரித்துத், திருத்துமுலகினின் மிசிக்கினுக்குத் திரவியம்வந்தவாறுபோலே, நரைத்தகிழவிசொல் மாயத்தாலே நஞ்சைக்கலந்ததென் றறியாமலே, வரைத்தமனையாள் கையாற்கொடுத்த மாயப்பானக்கந் தனைக்குடித்தார் (௰௫)

குடித்தபானக்க வினையினாலே கோலத்திருமேனி நடுநடுங்கித் துடித்துவிழுந்தாவி மயக்கந்நேரந் துணையாந்தம்பியாருசைன் தமையுந், தடித்துப்பொருகின்றதம்மகனார் காசீம்தம்மையு மருகழைத்து நடத்துபடிமுறை நழுவாமலே நல்லவொசியத்துச் சொல்லினரோ (௰௬)

எமதுதுணைவரே தம்பியரே யேகனருட்படிமுடிந்ததிப்போ நமதுதகப்பனார் போனவன்றே நமதுபெருமையும் பலமும்பேச்சிங், குமதுமகள் தன்னை காசீமுக்கே யுத்தகல்யாணஞ் செய்வீரென்ன, தமதுமகனான காசிமுக்குந் தரிக்குமதிபல சொல்லலுற்றார் (௰௭)

எந்தன்மகனாரே கண்மணியே யெங்கள்குடிக்கெல்லா மிளவரசே,அந்தமூடனின்று தமியேனுக்கிங் காதியருட்படி நடந்ததிப்போ,நந்தம்பலமெல்லா மினியேதுகாண் நமக்குப்பகையானோர் மிகுதியுண்டுஞ் சந்தமூடனேதானீர் சிறிய தகப்பனார் சொல்லைக்கடவாதையும் (௰௮)

எனதுமகனேயென் கண்மணியே யிறைவர்திறையிடு மிளவர
சே, யுனதுமனஞ்சற்றுஞ் சலிக்கவேண்டா முடையோன்விதிக்
காரொன் செய்வாரென்று மனதுமகிழ்ந்தொரு கடிதாசியில் வன்
மையாயொரு கத்தெழுதிச், கனதியிற் றென்னப் பொதிந்துமக
ன் காசீம்கையினிற் கட்டிச்சொல்வார் (௰௯)

கண்ணின்மணியான மகனேயிந்த கத்தச்சுனதியென் றன்ம
னதிலெண்ணிச்சலிப்பான வேளையிலே யெழிலா யவிழ்த்ததைப்
பார்த்தெழுத்து - நன்னூங்குறிவரு நடப்பாயென்றார் நல்லமக
னாருந் தம்பியருந்-தன்னினனுங்கூர்தல் மடவார்களுஞ்சகலஜன
ங் ளு மழுதனரோ (உ௰)

ஆதிமுதலோனதம்பிரானே யடியேம்பாக்கிய மிஃதுதா
னோ-எதிலாதன்னை பாவாவையு மிழந்தவெங்கள்பாலின்னங்கொ
ஞ்ச-மோதுநாளைக்கிங்கிவரிருக்க வொண்ணுதோவெனப்புலம்பு
றோம்-எதில்வெண்ணெயில் மயிர்வாங்கள்போல் இசுறுயிலுயி
ர்வாங்கிச்சென்றார் (உ௧)

உத்தபுசழகன் மவுத்தானபோ துடையோன்விதியென வேறி
னைந்து-கொற்றமுடன்பாங்கா யடக்கஞ்செய்து குறிக்குமதற்கா
ன சடங்குஞ்செய்து - புத்திமடியாமல்வரவர்க்குப்புத்திமதிசொ
ல்லிச் சஃ ப்படைக்கிச்-சுற்றமவரவர் தமையனுப்பித் துக்கப்பு
லிமக னுசைனிருந்தார் (உ௨)

அலியார்மகன் அசன்மவுத்தானபோ தங்கிங்கிருந்தயல் மன்
னரெல்லாங்-கொலைபாதகனுன எசீதுடனே கூடிப்பல்பல கூட்
டமாகிப் புலியாரலிமக னுசைனோடுபோர் புரிந்துமதீனத்தை
யழிப்போமென்றே - யொலியாங்கடல்போலத் திரண்டிருந்த
னுசைனுக்கதை அல்லா அறிவித்தானே (உ௩)

அன்றுபொழுதுபோய் மற்றைநாளி லானசீர்வெள்ளிக் கிழ
மைதனிற்-குன்றின்புயருசைன் கூட்டத்தோடே குத்துபாப்பள்
ளி தன்னிலேகி-வென்றியுடன் கதிர் வாளெடுத்து மிம்பர்தனிலே
திநின்றுகொண்டு நன்றிப்பொருடன்னை யுண்மைகொண்டு நல்
லோர்முகநோக்கிச்சொல்வதானார் (உ௪)

நீஞனவர்களேகேளுமெங்கள்செல்வத்தமையனார் ஆகிறத்திற்-
போனாரவரோடுநானும்போனாற் புவியிற்றுன்பொன்று மில்லை
யென்றார்-தானுநபிபரிச்சொற் கேட்டவுடன் சகலஜனங்களோட
ழுவதானார் கோனுருசைனவ ரழுகைமாற்றி குத்துப்பாவோதித்
தொழுவித்தாரோ (உ௫)

தொழுதமுடிந்துநல்சலாங்கொடுத்துச்சுற்றமுடனேதானெல்லோர்களு- முழுதுமொருமனத்துடையவராய் மூதலோனிடந்துவாவிரந்தசைனத்- தழுவியவருக்குமுறையாகவேதமையனுரீபட்டந் தனைக்கொடுத்தார்- செழுமையுடன் செங்கோலுசைனடத்திச்சிம்மாசனத்தினில் வீற்றிருந்தார், (௨௬)

மதினநபியுல்லா திருப்பேரனார் மடங்கலாசனத்திருந்தகாலக் கெதியில் விதிமுன் பின்றனக்குவருங் கேட்டையறியாதவெறியெசீது-விதியினருள்பெற்ற அலிமகனை வெற்றியுடன் கொல்லப்படைகூட்டியே- சதியன்பகையாக நாங்குதிக்குந் தண்ணீர்விடாமலே வளைந்துகொண்டான். (௨௭)

உத்ததனதுமந்திரியதானவுமறுசாதுவைப் பேரணியாய்-வைத்துப்பல்பல மன்னர்தம்மை வகுப்பிலணியணி படைவகுத்தான்-தத்தும்பரிமன்னர் அலிமகனார் சாற்றுமதுகேட்டுக் கூட்டத்தோடே-வெற்றிப்புகழுடனழகாயொருவெளியிற்பாளையமிறங்கினரே (௨௮)

மலைகள்மலைகள்போல்வெளிகடோறும் வன்னக்கூடாரமிகவடித்து-நிலையினணியணி படைவகுத்துநீதியலிமகனிருந்தகாலை- கொலைசெய்நரகத்திற் கிரையாகியகொடியோனெசீதுதனுங்குடிகேடென்றான்-சிலையோனுடையதன் மகனுடனேதிடத்தினுடன் சிலசெப்பலுற்றான். (௨௯)

நாட்டேம்பெரும்புகழ்மகனேகேளாய் நமக்குப்பகையான அலிமகனை-நீட்டுமவன்படை முறிந்தோடவே நீறுநீறாகப் பொருதுவென்று-கூட்டமுடனவன்றலையைவெட்டிக் கொண்டுவரவேண்டுமெனவுரைத்தான்-தோட்டுமலர்ப்புயனுமதுகேட்டுச்சூதனெசீதுடனிதுசொல்லினான், (௩௰)

ஆலநபிதோழரலியாரையும் அண்ணல் அசனையுஞ் சதிபண்ணினேம்ஒல்முடனிதுமுறையல்லக்காணுசைனையுஞ்சதிசெய்யவேண்டாஞ்-சீலமெனச்செய்யிலிந்தக்குற்றந் தீராதொருநாளுஞ் சொல்லேன் சொன்னேன்-ஆலநபிதிருப்பேரனாரவர்தமும்மத்துநாமல்லவோ. (௩௧)

தன்னையறிபவர் நபியிறசூல் ஷபாஅத்துநமக்கினி வேண்டாமோ-அன்னகெடுபுத்தியாகாதுகாண் அலியார்மகனுடனெதிர்க்கவேண்டா,மென்னவுரைத்தனன் கொலைஞன்கேட்டே யிலங்குமிருகண்ணி னெருப்புகக்கத்-தன்னுமிதழ்பற்றிப் பற்கடித்துத்தோன்றலுடன் சீறிச்சொல்லலுற்றான். (௩௨)

விருதினுடனின்றுநீசொன்னதுபோல்வேறேயொருவனென்முன்னிற்சொன்னாற்- குருதிபெருகவிங்கிந்நேரமேகொடியவாள்தனக்கிரையிடுவேன் கருதிவிதைக்கொட்டைக் கெலிவளர்த்தகதையாருனைப்பெற்று வளர்த்ததெல்லாம்-பருதியுலகினில் நீயெனக்குப்பகையாயிருந்தவாறறிந்திலனே. (௫௩)

இடியினெதிர்முன்னே மயில்நிற்குமோவிந்த ப்பிழைதனைப்பொறுத்தேன் கண்டாய்-கொடிய அலிமகன் தலையைவெட்டிக்கொண்டுவாராதபோதுனைநான்- கடியவடிவாளாலரிந்தரிந்துகாகம்பருந்திற்குவிருந்திடுவேன்- படியிலிதுதனைநினைந்துகொண்டேபடைபோவெனச்சொல்லியனுப்பினனே. (௫௪)

நன்மையறியாதானுரைத்திடவேநாய்வாய்க்கெதிர்சொல்லப்போகாதென்று-பன்மையாகியதம்பியுடன்பயனுந்தாமுமாய் நினைந்துகொண்டே-இன்மையுரையாமற் போர்புரியப்போவானெனச்சென்றுபுலியலியின்-வன்மைமகனுசை லிடத்துவந்துவணங்கித்தன்செய்கையியம்பலுற்றார். (௫௫)

ஆதிநபிதிருப்பேரனோ அலியார்செல்வனோயசன்றனையே-நாதனருட்கொண்டபாத்திமாவெம்நாச்சியார்பெற்றநாயகமே- ஏதுமறியாதவெறியெசீதிங் கென்னையுமதிடம்படையேவினன், ஊதுமறை அசன்றனைவனோயும்மைப்பொரமனம் பொருந்துவேமோ. (௫௬)

உம்மைப்பகைகொண்டமாரீத்தர்க்கெல்லா ஓயிலெகெதியல்லால்வேறுமுண்டோ,இம்மையிற்பெரியோர்களேனு மெரியைச்சிறிதென்றுமுடியலாமோ,பம்முமெசீதுக்குநான்பிறந்தபாவமுமைக்கண்டுதீர்த்தேன்கண்டீர்,தன்மையறிகுவீர் பயனுநானுந்தம்பியுநுமதடைக்கலமே, (௫௭)

இட்டுமெசீதைத்தான்வெல்வதற்குத்தேவரீர்வேண்டாம் அடிமைபோதும்,வெட்டியவன்படைமுறிந்தோடவே வெல்லாவிடிலெந்தன்னாண்மையென்னதுட்டன்பகையனாயுமக்காகதான்றொடர்ந்தங்கிறந்தக்கால்சுவர்க்-கமுண்டா-மட்டுப்படாதிங்கேவந்தாரிகொல்வேன்வரவுநான்சொல்லக்கேளுமையா. (௫௮)

அவிடந்தனிலுள்ள எசீதுக்கெல்லா மஞ்சியாண்மைநான் செய்யவேண்டும்,இவிடந்தரித்தபாளயந்தைவாங்கியேகிமறுதேசத்திருப்போமென்றுங்,குவடின்புயவுள்ள லபீமகனோர்கூடும் படைகளுங் கூட்டிக்கொண்டே-கவடொன்றறியாதான்சொல்வழியேகடிந்தங்கிர வெல்லாம்விரைந்தேபோவார் (௫௯)

கடிந்தங்கிரவெல்லாந் தொலைக்கொண்ணுதகடியதாரத் தேவிணாந்தோடுவேவார்,விடிந்தவிடம்பார்த்தாற் றமிருந்தவெளியதாகவே யிருக்குமதாற்,படிந்தபெரும்புகழ் நமிபோனார் பாரமணதிலே புதுமையாகித் தடிந்துமொழியாதகாரணத்தார்தங்கையாருடன் விளம்புவாரோ. (௬௰)

எங்கள்பிறவியே தங்கையரோ பிரவெல்லாமோடி விடிந்துபார்த்தால்,அங்கங்கிருந்தமுன் தலைமதுவந்தனுகுதிதுமகா புதுமையென்றார்,புங்கமுடனந்த நிலந்தனையே போற்றும்புலியலி மகன்நோக்கியே,தங்குமவிடத்தின் குறிகண்டதைத் தமயனாருடன் சாற்றலானார். (௬௧)

அன்னையிமிக்கொடை பண்ணனோ அண்டினோர்தங்கட் காதாமே,முன்னொருநாளில்நம்பேரனார்முகம்மதுசொன்னசெந்திரந்தான்,துன்னும்கறுபலா வெளியிதுவேதுரப்போனாலு மிதுவிடாதில்,இந்ததலத்திலே படைநடக்கு மென்றேமிகச்சலிப்பாகச்சொன்னார், (௬௨)

தங்கையார்சொன்ன குறிப்பறிந்து தருநற்கொடையுசைன்மகிழ்ச்சிகொண்டார்,பொங்கமாகிய வுமறெழுந்து புதுமை புதுமையென்றகமகிழ்வா, பங்கம்புளகமாயிருந்தாரப்போ தருமையறியாத வெகிதுபடை, சங்கையாகியவுசைன்மீதிலே தறுகாதெழுந்துபோர்ச்சண்டைசெய்தார். (௬௩)

வீணென்கீதுதன்படையைக்கண்டுவேக்கைப்புலிபோலெயுமறெழுந்து, சேணிலாவன்னமுகத்தினேனே சிங்கப்புலியலிசெல்வனோ, தாறுவருளினுலட்டுக்கிடைதனிவேடபுலிவீழ்ந்தநகைமைபோல, ஆணிலழகோ யவன்படையிலடியேன்றனைவிட்டுப்பாருமென்றான் (௬௪)

பாரித்துலாவுவான் வாளைசப்பான்பரிசைதட்டுவானலக்கரிப்பான்,வாரிக்களபசந்தனப்பூசுவான்-மார்புதட்டுவான்மதம் பொழிவான், பூரித்தட்டுவான் எதிநகன்னைப்பொடியின்றவிடாக்கிவிடுவேனென்பான்.தார்மொய்த்திடும்புகழலிமகனைதாருவ்விடையிப்போதாருமென்றே, (௬௫)

தீட்டுங்கிரியானமதயானையை நெகினர்தெறித்தங்கேவிட்டனபோல், வேட்டமுடன் கூட்டைத்திறந்துமெள்ளவேங்கைதன்னைவிட்டவிதம்போலவும், தீட்டுஞ்சதுமறையலிமகனார் சிங்கமெனவந்தவுமதுதன்னை, கூட்டுங்கருணையால்விடைகொடுத்தார் எதிதுபடையிலேயவன் புகுந்தான். (௬௬)

கோடையிடிபோலவலங்கரித்துக் கொக்குத் தளத்திலேராஜா ளிபோல், வேடவிளையிறு லெசிறுவிடும்வெள்ளப்படைக்கடல்ற டிப்புகுந்து, நீங்கடற்பால லணியணியாய் நின்றபடை யெல் லாந் துரத்திவெட்டிக், கூபிங்கழுகுக்கு நாய்நரிக்குங் கொடிக்கு ப்பருந்துக்கும் விருந்தளித்தார். (௪௭)

கலிச்சந்தவிருத்தம்.

சிரமறுந்தவர் கோடிகோடிமா சிலையறுந்தவர் கோடி நீள்
கரமறுந்தவர் கோடிகோடிநற் கணையறுந்தவர் கோடிமே
லுரமறுந்தவர்கோடிகோடியே ருயிரறுந்தவர் கோடிகுழ்
துரமறுந்தவர் கோடிகோடிவாட் டாமறுந்தவர்கோடியே (௪௮)

தொங்கல்.

இந்தவகையாக லெசிறுவிடுமெதிர்த்தபடையெல்லாந் துரத்தி வெட்டி, வந்து உசைன்திருப் பாதம்போற்றிமக்கநபிதிருப்பேர ரே, சிந்தைமகிழ்ந்தெந்த னுயிர்தனைநான் தேகரீக்காகச்செ லவிட்டா, லெந்தவ்வலிமையு மாண்மையுந்தானென்னென் று ரைத்தனன் உசைன்மகிழ்ந்தார், (௪௯)

ஆண்டுபுகழுசை னுமறுக்காகஅல்லாவிடந் துவாக் கேட்டாரப் போ, மீண்டுமெசிறுதான் வரவிடுத்தவெள்ளக்கடற்படை வளைந் தார்கண்டு, தாண்டுப்பரியுமரியின் னருமாதவளைக்குளத் துறும்பா ய்புபோலக், தோன்றுங்கிரிதொறும்விரைந் தோடிடத் துரத்தித் துரத்தினின்றமராடினார் (௫௰)

இடிக்குநிகராக. வலங்கரித்தேயெசிறுபடையெல்லாங்கைப்பி டியாய்ப்பிடித்துப்பிடித்துத்தானிரண்டிரண்டாய்ப்பிளந்ததால் படைக்கைசலித்துப், வெடித்தமுழக்கத்தாற்குரல்சலித்துப்வெட் டினதிகத்தால்வாள்சலித்துமடிந்துப்பொருகின்றவேளையிலேவ ளைந்தபடைநடுச்சஹீதாயினார், (௫௧)

வெண்பா,

வெப்புமருவாரைவெட்டிக்களைவறுத்துத்
தம்பியெனுமுமர் சஹீதானார்-கும்பி
யெதிராகிவீழ மெசிறுபடையென்றும்
பெருநெட்டுக் கோழுன்னோடாயின் (௫௨)

தொங்கல்,

தனதுதமையனுரசஹீதானபின் தம்பியிளையவந்துசைனைப் போற்றி, யெனதுகிளைக்கெல்லா மணிவிளக்கேயெங்கள்நாயகர ளிமகனே, எனதுபெறுமென்றன் தமையனிற்பின்காயமெடுத்து நானிருந்திட்டேனோ, விளைரு னெசிறுதம் படையைவெல்லவிடை தா னெனக்கு நீர்தாரேனுமென்றார், (௫௩)

உரைத்தவாலிபன் முகத்தைநோக்கி யுத்தந்தமையனார் மரித்தாரென்றே, கரைத்தலாகதீரிரங்கவேண்டாங் கத்தோனருட்படி வீறுபெற்றார், நிரைத்தபெரும்படை வெல்லுமென்ன நீதியபிமகன் விடைகொடுத்தார், விரைத்தபெரும்படைக் களத்தனிலே வேங்கைப்புலிபோல நடந்தனனே. (௫௪)

நன்றியறியாத எதிர்ப்படைநாலுதிசையினும் வளைந்துகொள்ளத், துன்றிப்புடனந்தப் படையையெல்லாந் துறையாடியே பொருதுகொன்று, வென்றியுடனேதானின்றாப்போ லிம்பன் படைமீண்டுஞ் சண்டைசெய்தா, ரன்றுசகிதான தமயன்போலே யருமைத்தம்பியுஞ் சகிதாகினார். (௫௫)

தம்பிசகிதாகப் பயலொருவன் சங்கைபுகைன்பாதந் தனைப் போற்றியே, நம்புநயிதிருப் போனோ நாச்சியார்பெற்ற நாயகமே, தம்பமெனக்கான விருவரைப்போற்றபிபனும்படை வெட்டியிந்த விம்பர்தனிற்பொல்லா வெதிரைவெல்ல வெனக்குய் விடைதாருமெனநவின்றான் (௫௬)

சொல்லுமொழிகேட்டங் குசைச்மொழிவார்சுவர்க்கவாதியாயவர்கள்போனார், மெல்லியவர்க்கு தீரிரங்கவேண்டா மெதிரிதனை வெல்லப் படைக்களத்தே, செல்லதினைவானுக்செல்லுமெனச் சிங்கப்புலிமகன் விடைகொடுத்தார், கொல்லவரும்பெருஞ் சேசரி போற்கொடியோரமர்க்களம் புகுந்தனனே, (௫௭)

அருமையறியாத எதிர்ப்படை யாழிக்கடல்போலவளைந்தவர்கள், வெருவிவெருவியே யோடவிவர் வெட்டிதொடிப்போதுதில்லாமலே, பெருமையாகவே வமர்புரிந்தார்பின்னுந்தியவர் வளைந்தடித்தார், பொருதுசவந்தானவிருவரைப்போற்புலியாம்பயலுமே சவந்தாகினான். (௫௮)

தெரிந்தமூவரின் சவந்திறத்து ஜெயிக்கும்புலியபிமகனழுதார், இருந்தபேரெல்லா மழுதனர்க ளிரும்புங்கல்லுமே கரைந்துருக, வருந்தியிவரங்ங னிருந்தகாலை வரிசைநேசன் செல்வானேர், திருந்துஞ்சிறு பிள்ளையானகாசிம் சிறியதகப்பனார் திருமுன் வந்தார். (௫௯)

துங்கநயிதிருப்போனோ சுவர்க்கக்கனிதின்று தகிலுடுத்தோய், சிங்கப்புலியபி செல்வனோ திவ்யமூறுஞ்சிறு தகப்பனோ, எங்கள்தகப்பனார் தம்பியோஎதிரதனைவெல்ல வென்றனக்குப், புங்கமுடன்விடை தாருமென்றார் புகழாரபிமகனுமசை னுரைப்பார், (௬௰)

தேசம்விளங்கிய மணிவிளக்கே செல்வமகனாரே கண்மணியே; பேசுஞ்சதுமறை யாசேயெங்கள் பிள்ளைக்கலிதீர்க்க வந்தவரே, அரியனையீன்ற சிறுபிள்ளைநீர் ஆலயாவாசைநீர் கண்டதில்லைப், பாசமறியாத எதிர்துடனே படைதான்செயவேண்டா மெனத்த டுத்தார். (௬௧)

செருநர்படைப்போர்க்குப் போகொட்டாமற் சிறியதகப்ப னார் விலக்கினைநாற், தருவின்கொடைக்காசிந் சலித்துவாடித் தனித்தோரிடத்தினிற் போயிருந்து, அருவின் தகப்பனு மொழுதிக் கையிற் குறிப்பினுடன் கட்டும் சுந்தரனை, மருவியொன்றும்பா ராதவிழ்த்து வாசித்துப்பார்த்தா ரதிலார்செய்தி. (௬௨)

உற்றபெரும்படைக் களத்தனிலேயுசைனார் தமக்குமுன் மரிக் கவென்றுஞ், சுற்றமுடனேதான் சகிதாகினால் சுவர்க்கநகாய்க் கிடைக்குமென்று, பித்தவகைசெய்யக் கடனனவே யெழுதுங் குறிப்பினைப் பார்த்துப்பின்னர், தெற்றும்படைவென்ற அசன் மகனார் சிறியதகப்பனார் திருமுன்வந்தார். (௬௩)

இலக்குறைகள் நலக்கொழுந்தேசிறியபாவாவே திருவாழ் வே, எலப்புயராங்கள் தகப்பனார்தா மெங்கியிவைப்பதாய்க் கிட க்குமேனாற், தூலப்புக்கொருகத்துத்தந்தார் சொல்லுமதையிப் போதவிழ்த்துக்கொண்டு, வாவ்வாசித்துப்பார்த்தேனதில் வந்த செய்திகேண்மெனச்செப்பினார், (௬௪)

உனக்கமனுநெறி தவிராமலு முமதுவார்த்தையைக்கடவாமலு ம்- எக்கமதுவில்லா துமக்குமுன்னே யெதிர்த்தபடையிலே சகி தாகவும்- தாக்கமுளசெய்தி கண்டேனிப்போ தானுமக்குமுன்ச கிதாகுவேன்- ஆக்கமுடனென்னை யனுப்புமென்று ராதுகேட்டு மைசன் மிக வழுதுசொல்வார். (௬௫)

என்னேயினிதான கன்மகனே யெங்கள்குடிக்கெல்லாமிளவர சே-யொன்னாரிங்கமே சிறுபிள்ளைநீ ரும்மைப்படைமீதில்விட ட்பொருந்தேன்-பன்னுரும்பொல்லா தவனெசிது பாலன் அரு மையை யறிநவனோ- அந்நாட்டமையனு னைக்குச்சொன்னவ னுமையொளிப்பத்தொன்றநுகேண்மென்றார், (௬௬)

உகந்துதான்பெற்ற விளக்கரும்பை யுமக்குக்கல்யாணஞ் செய்யச்சொன்னார் - மகிழ்த்துநானப்போ நல்லதென்றேன் மக மேயிதனைநீர் கபூர்செய்திடும்- இசயில்மகளைநான் நிக்காகெழு தியிதிறம்மனக் கொண்டபின்னர்- மிகுந்தபடைக்குநீர் போ வீரென்றார் வெற்றிமகன்கேட்டங் கிதுசெப்பினார். (௬௭)

சிறியதாதையே யலிமகனே செய்புக்கலியாணச் சீராட்டெல்லாம்- எறியும்படைகடற் கலக்கத்திலே யெந்தப்படிமணஞ் செய்வதென்றார்- அறிவாருசைன் சொன்னார் மகனேஊயாத் தத்துவமவுத்தையு மறியொணு னு- னுறையீதாகையால் மறைவழிப்போற்றுனியாவாசையைக் காணவேண்டும். (௬௮)

இந்நவிடத்தில் நம்முயிர்பிழைத்தால் எழிலாவொருமணம் பின்செய்கிறேன்- கன்னிக்கரும்பை யிப்போதினிலே கல்யாணஞ் செய்து கொள்ளுமென்று - வன்னப்புயருசைன் சொல்லக்காசீமனநுவொருந்தியே மகிழ்ந்தாரங்கு - வெஃனக்கொடையுசைன் தம்மகளையசனின்மைந்தற்கு மணமுடித்தார். (௬௯)

வருமாப்பிள்ளையைப் பெண்ணைமிக வாழ்த்தியேத்தியே வீடுகூட்டி- யுரைமாற்றதிகமாம் பொன்னோடுபொன் னென்றாய்க்கலந்திடு மாறுபோலக்- கதையாய்ச்சிறுபெண்ணு மாப்பிள்ளையுங் கலந்துவிளையாடி யிருக்குநேரந்- திலாமாக்கடலறி வானகாசீஞ்சீராருசைன்முன் வந்திதுமொழிந்தார். (௭௰)

இளமைச்சீயமே யலிமகனே யெந்தன்கருமத்தை நிறைவேற்றினீர்-வளமையறியாத வொசீதுபடை வாரிபோலவேவளைந்தாரிப்போ- திளமைவயதன விரங்கவேண்டா மெழிலாய்விடைதாருமென்றாருசைன்-இளமைவயதான காசீமவரிடத்திலிம்மொழியியம்பலானார். (௭௧)

வாலக்குமரரோ மணவாளரோ மணக்கோலமின்ன மாறவில்லை- சாலப்பெரும்படைக் கினிச்சிலநாட் டரித்துப்போமென்றங் குரைத்தளவில்- ஏலப்புயத்தரோ நில்லேனென்னை நிறுத்தவேண்டாமென் றுருசைனார்-சாலப்புகழுந் தேவியர்க்குஞ் தாய்க்குஞ் சொலிவாருமென்றனரே, (௭௨)

சொன்னவுடனேதான் மனமகிழ்ந்து துய்யபுகழ்தாயா ரிடத்திற்சென்றிங் - கென்னையுவந்தீன்று வளர்த்ததாயே யெசீதுதனைவெல்லப் படைக்குப்போறேன் - மன்னும்விடைநீர்தான் தாருமென்றார் மாதாவுருகியே மனங்கலங்கிப்- பொன்னின்மகனார்தம் முகத்தைப்பார்த்துப் புலம்பிப்புலம்பியே சொல்லலுற்றார்,

கொடியவெசீதுட பெரும்படையிற் குழந்தைநீர்செல்லத்த குறியாமோ-மிடியினிடையினுள் பலனிதுவோ பெற்றுவளர்த்தவென் பாக்கியமோ-இடையில்விதியிதோ தகப்பனில்லா எத்தீம் தலையினில் விதியிதுவோ - படிவானுலகெல்லாம் படைத்தகோவே பாலன்றனைக்காத்துக்கொள்வாயென்றே. (௭௪)

222332

படைத்தோனளவினிற் பாஞ்சாட்டியே பாலர்காசிமையறவ
ணைத்துக் கிடைத்தபலனிதோ மைந்தனோ கீழ்மைஎசிதம்மை
யறிகுவானோ- விடுத்திடுமிந்த வெண்ணமென்று ரோதுமகன்தா
யே விலக்காதுதற்-றிடத்தில்விடைதாரு மென்றுவாங்கித் தேவி
யாரிட மினிதுவந்தார். (௭௫)

பத்தாவரக்கண்டே புசைன்மகளார் பாதமலர்தன்னைப் பணி
ந்துபோற்றிக் கொத்தின்பலிநீராற் கால்கழுவிக் கூந்தலதனாலே
தான்றுடைத்து- முத்தாலழுத்திய பாய்மீதிலே முறையாலிருத்
தியங் கருகிருந்தார்- மத்தாஜலம்புய காசிமப்போ மனைவியாரு
டன் சொல்லுற்றார். (௭௬)

எந்தன்மனைவியே யிளங்குயிலே எகிதுபடை நம்மைவளைந்து
கொண்டா - ருந்துமப்படை யோரைவெல்ல வுனக்கும்யான்
போறே னென்றாரப்போ - திந்தவுலகாரு நெருப்பதெல்லாம்
எழில் ருசைன்மக ளார்வயாற்றில்- வந்தங்கிருந்தம்பா லீரல்மன
ம் வதக்கிப்பதைபதைத் தேயழுதார். (௭௭)

பதித்துவெயிலிலே யிடுபூவைநேர் பாவைமுகம்வாடிப்பதை
பதைத்துச்-சிறுத்தவயதிலே பெருஞ்சலிப்பாய்த் தியங்கித்திய
ங்கியே யெண்ணமுற்று வெறித்தகிளிபோலமனமருண்டு வேட
ன்வலைப் படிமானதுபோற்- கறுத்தநெடுங்கூந்த லவிழ்ந்துசோ
ரக் கலங்கிக்கலங்கியே யழுதுசொல்வார். (௭௮)

மாலைமலரின்னம்வாடவில்லை மணக்கோலமின்ன மகல்வில்லை
ச்-சேலையிடமின்னந் துவளவில்லைச் சிறியாள்மயலின்னந் தீரவி
ல்லை-ஓலப்புவிமீதி லிருவருமே யுலகாசையின்னந் நாணவில்லை·
ஆலம்படைத்தோனே தம்பிரானே அடியாள்பாக்கிய மிஃதா
தானோ (௭௯)

எடுவிரிமலர்ப் புயத்துசைனார் மகள்நான்கணவனார் வருவா
ரென்றே- நாடியிருந்திடும் பலனிதுவோ நயினார்கோத்திரவாழ்
க்கையிதோ - வாடிமெலியவோ நான்பிறந்தேன் வாழ்க்கைப்ப
டாமலே யிருக்கேனில்லை - யாடிப்பகறுமே சரீரமெல்லா மெ
ன்றல்லாமலே பாஞ்சாட்டினார், (௮௰)

ஆலியனாவிலே பாஞ்சாட்டியே யாளனார்முகம் பார்த்துரைப்
பார்-நாதனருள்பெற்றநாயகமேநபினார்போர்தாம்பயந்தகோ
வே-நீதியவியார்தம் போரனோ நீண்டதிரையாரு நிந்திலமே-ஈத
லருள்கொண்ட போரசே யெந்தன்கணவனோ யாண்டகையே()

அலையுஞ்சிறியேனுக் கேதுபுத்தி யடியாளுமக்குட்பின் னிருக்
கமாட்டேட-னிலையுந்தரியாது நீச்சுமிக்கலை நிலமேலே சிறுதாபம் மா
னாமேறுவென், றலையின்மெழுகாகப்புலம்பி நின்றருகைசனோர்மக
ளிந்தப் படியழல்கண்-டலையும்மலையுபூவாங்மலைமுயு மதேசத்துய
ரமையழனாயினை (௮௨)

நலைவிபுலம்பல்கண் டசன்மகனார் தமதுசலிப்பெல்லாமுவத்
தடக்கிக் - கலவிமயில்தன்னை மடியில்வைத்துக் கண்ணீர்மாற்றி
யே யறவினைத்துப்-பலநல்மதிசொல்லிப் பசைனோயேயேபாய்
ந்துபடைவென்றுவாரோனிங்கன் - துலங்கவிருமென்றார்கணைவர்க்
காகத்துய்யோனிடந்துவாச் செய்தனரே. (௮௩)

மிக்கமுதலேனென் கணவனார்க்கு வெற்றிவிருதெல்லாங்கொடு
த்துக்காப்பாய் - எக்குஞ்சாயமறையிறைக்கிரேனே எசிதுதனை
வெல்ல வுதவிசெய்வாய்-தக்கவாவென்றன் கணவனார்க்குத் தழும்
புபடாமலே காத்தருள்வாய் ஹக்கேவினையில்லாப்பெரும்போ
ருனே கழறுமென் சலிப்பகற்றுவாயே (௮௪)

ஆசார்க்காசனே தம்பிரானே அசுரனார்குமாரனொன்றுடனே-
பிரிசத்துடன்வந்து கூடச்செய்வாய் பிறப்புமிறப்பு மில்லாதவ
னே-வரிசைப்பெரியோனே யென்றனக்கு மங்கிலியப்பிச்சைத
ருவாயென்றே - பிரிசத்துடன்போற்றுதின்றாப்போ பெலத்த
காசிமா ருசைசன்பால்வந்தே (௮௫)

மனையினடந்தவாறனைத்துஞ்சொல்லிமருவாளை வெல்லவிடை
கேட்டனர்-கனைனாற்சிங்கம்போன்றஉலசன் காசிந்தனைமகித்து
மூவிப்போற்றி-வினைனூல்படைமீதிற் புகுந்துவெட்டும் விதங்க
ளனைத்துங் கள் யாவுஞ்சொல்லிக்-கனைதியிலைறவன்பாற் பாஞ்சாட்
டியே கவனுவ்விடைகொடுத்தார்காசிம்தாம் (௮௬)

விம்மியெழுந்திடு மிருட்கூட்டத்துள் வெய்யோனொளிபாய்
ந்தவிதமதுபோற்-கம்மனைசிறுதன்படைக்கயத்திற் காசிப்பகு
ந்தனர் கண்டோரெல்லா,நம்மையிவன் கொல்வானெகொல்வானெ
ன்றேனோட்பாரோ தங்கிநூ ரதனைக்கண்டு,கின்னைமெசிதுந்த
லைமந்திரிசெப்புமுமறுசாதெனுக்கொடியோன் (௮௭)

சின்னவிவன்றன்னே டெதிர்த்திடாமற் சேனையாவோலா மொ
துங்கியோட,லென்னபுதுமையென்றறிந்திலோமென்றேநந்தலசு
றக்குத் தனையழைத்து,மன்னுமசன்மகன்சிறுவன்காசிம் வந்துதி
ந்திருனைவனையின்னே, இன்னபிள்ளைமாய் வெட்டியிங்ஙன் சே
ரென்றுனதற் கன்னுரைப்பான் (௮௮)

நந்தப்பொருகின்ற அலியுமல்ல நான்கியார்களி லொருவரல்ல, அந்தப்பெருங்கடற் சேனையல்ல அசுனுருமல்ல வுசைனுமல்ல இந்தச்சிறுவனோ டெதிரியென் றிங்கெல்லனைப்போர்செய்யப்போகச்சொல்லீர், நுந்தம்படைகொடுபோகேனென் றுனுமறுசாத்தற் கெதிருரைத்தான் (௮௯)

வீரப்புலிபோல விருதுசொன்னாய் மேவுஞ்சிறுவனல்லாமலி ந்து-வுரைப்பொருவடா போடாவுனக் கதிகசப்பளமானகையினுற் றீரத்துடன்சொன்னாய் நில்லாதிப்போ சென்றுபொருவென்று வுதற்குமவன், பாராப்படையல்லச்சிறுவனொடுபடைசெய்யவெனல் றங்கினுஞ்சொன்னான் (௯௰)

அடவிற்பொருமெந்தன் மக்கள்நால்வ ரதிலேயொருவனைத் தானேவினு-விடறுபடவெட்டி யிவன்றலையை-யிந்நேரங்கொண்டு வருவாரெனன்றான் ; தொடருக்கசட்டுமர் சாதுநீதான் சொன்னவீரத்தை யறிவேமென்றான்- லொடிய அசறக்கப் போதுமூத்தகுமாரனைப்படைக்கேவினானே (௯௧)

மதியொன்றறியாத அசறக்கவன் மைந்தன்படையினைத் திரட்டிக்கொண்டே-யெதிரியொன்றில்லா அசன்சேய்மூன்போ யெதிர்த்துச்சமர்புரிந்தானப்போது, கதிர்செய்வாளினாற் பெருயலையிற்கல்தற்ச்சிற்றுளி யினக்குமாறாய்ச்-சதியனசறக்கு மகனைவெற்றிச் சயங்கொள் காசீம்வெட்டிப்பிளந்தார் (௯௨)

ஈதுதனைக்கண்ட அசறக்குத்தா னெந்தன்குமாரன் மூத்தோனைக்கொன்றான்-எதமுளவவன் தனைவிடேனென் றிசைத்தங்கினுமொரு மகனைவிட்டான், ஓதுமவனவி பேரர்முன்வந்துற்றங்கார்பப்ரித் தடடாவெந்தன்-நீதித்தமயனைக்கொன்றபழிநிலத்தினுண்ணிடங் கொள்வேனென்றான் (௯௩)

விருதுபேசிய காளைதன்னை வெல்லவேண்டுமென் றசன்குமாரர்-அரியபெரியோனை முகம்மதுவை அலியை மிகப்போற்றி வாழ்த்தியேத்திக்-கருதுமுனை மேருதனைச்சிற்றுளி கண்டப்படவெட்டுங் கதைபோலவே-பொருதவறியாதான் அசறக்கின்சேய்பெண்றப்பிளந்தாரிரண்டுதுண்டாய் (௯௪)

இளையமகனைத்தான் கொல்லக்கண்டங் கினனசறக்கு வேகமாகப்-பிளவுபடவெட்டி வருவாயென்னப் பின்னுமொருமகன்றனையேவ- அழகுபுலிய விபேரனார்முனந்த இளவல்சென்றார்ப்பரித்தே யுழறினன்வந்தே தமயன்பழிக் குன்னையேகொல்வேனெனவடர்ந்தான் (௯௫)

துட்டனெறிகேடன் கொடியோன்விட்ட குமன் அசுரக்குமகன்றனையே-தெட்டுங் கருமையார்மதயானையைச்சிங்கக்குட்டிதான்பாய்ந்தவண்ணம், வட்டவுலகெல்லாம் படைத்தோனையும்வள்ளல் நபியையும்போற்றிப்பாய்ந்து, பெட்டையசுரக்கு மகனைக் காசிம்பிளந்திரண்டாகத் துணித்துவிட்டார், (௯௬)

மக்கள்மூவருமிறந்ததனால்வம்பன் அசுரக்குமனம்புழுங்கிட்,மிக்கிருகியேபடைமீதிலே பின்னுமொருமகன் றனையேவினான், றக்சதமயனைக் கொன்றபழிசற்றாகிலும்விடேனெனச்சொல்லியே, மிக்கஅசுரக்கு மகன்காசிமை வெல்வேனெனச் சென்றங்கடர்ந்தனனே, (௯௭)

தானமறியாதகொடியோன்விட்டசதியன் அசுரக்குத்தன்மகனை வானமலைபோலார் பஞ்சுதன்னைவன்னிப்பொறியொன்றே யழிக்குதல்போல், ஞானமருவிய நபிதமையுநாயனவிலையுமனதிலெண்ணிச், சோனைமுகில்போலுமுதவுங்கையாற் றுங்கப்புலிபோர் பொருதுகொண்டார், (௯௮)

சூரர்நால்வரங்கிறந்தல்கண்டு துட்டன் அசுரக்குவேகமாகப், பாரமாகியபரியிலேறிப்பரிசைசொட்டை வாள்பலவணிந்து, தூயமாகியவின்னுமன்னுநந்தாகிபறக்கவேபரிநடத்தி ஆயாரத்தோடதட்டிவந்தங்கவியர்ர்போர்முன்னெதிர்ந்துசொல்வான். (௯௯)

எனதுதிருமக்கள் நால்வரையு மீறுபடவெட்டிக் கொன்றாயுன்னைச், சினதுபடப்படக் கொல்வேனென்றான் சிங்கப்புலியலிபேரர்சொல்வார்-உனதுகுதிரையின் சேணத்தின்வாருதனையிறுக்கிநீ பொருவாயென்று,ரதனையசுரக்குத்திரும்பிப்பார்த்தானப்போதவனைக்காசிம்துணித்தார். (௱)

மைந்தர்நால்வரோடப்பனையும்வள்ளலலிபோர்துணிக்கக்கண்டங், இந்தவாறுநான் கொல்வானென்றே யிருந்தபடையெல்லாமோடிப்போனார். தொந்தமிமவன் பெரும்படையிற் சூரரொருவருமெதிர்த்திடாமற் சிந்தையினையாதஅசல்மகனார் சிறியதகப்பனார் திருமுன்வந்தார். (௱௧)

தமயன் மகன்காசிம் வரக்கண்டங்கன் சக்கையலி மகன்மனமகிழ்ந்தே, இமையார்புகழ்ந்திடுங்குருமுகிலே யெந்தன்மகனோகண்மணியே அமையும்விருதெல்லாமுமக்கேயாகும் ஆண்பிள்ளைச்சிங்கம் நீரேயென்று, முமையன்புளதாய்க்குமனையாட்டிக்கு முன்னசலிப்பைப்போயகற்றுமென்றார். (௱௨)

தூயருரைத்த சொற்றவருமேலே துங்கக்கூடாரம்புகுந்தாருடன், தாயாரெதிர்வந்து மனமகிழ்ந்து தயவிற்றழுவியே தானெடு

த்து, வாயிலமையாதபுகழ்புகழ்ந்தேமறுத்துமிலவைத்தாற்பெற்
றேமென்று, காயங்குளிர்ந்துகண்பறிபோனவர் கண்பெற்றது
போலமகிழ்ந்துசொன்னார், (௱௩)

வாய்த்தமகனோ கண்மணியேவள்ளலசனீன்றமதகளிறே, கா
ய்த்தபடையெல்லாம் வென்றகோவே கருதும்விருதெல்லாமும
க்கேயென்றாஞ், சாய்த்தழுழலின்றன் றேவியர்க்குஞ் சலிப்பை
யகற்றுமென்றுரைத்தபின்னர்பூத்தமலர்க்கொடியனையவியர்தம்பு
ங்கத்திருமாடம்புகுந்தனரோ, (௱௪)

கணவர்வரக்கண்டேபுலைசன்மகளார்கரந்தவுயிர்மீளவந்தவாறு
ய்ப்பிணியின்விரும்பியமிடியர்கள்தாம்பெருகப்புதையல் பொ
ன் னெடுத்ததுபோல், துணையின்மன மகிழ்ந்துடல் பூரித்து
துலங்குமாலத்தியெடுத்தே, அணியின்பல் வீராற்காலகழுவி
யதிமேலர்க்கூந்தலாற் றுடைத்தனரோ, (௱௫)

பொன்னின்பாயினி லினிதிருத்திப்போற்றிவிசிறியால்விடாய்
தணித்து, மின்னின்முகத்தாரேயுமக்கு நாயன்மேன்மேலும்வெ
ற்றிதருவானென்றும், பன்னுஞ்சுருதியில் நீதிக்கேதான் பரிவாய்
வந்ததேபோதுமென்று, மன்னர்காசிமும் உசைன்மகளும்வண்
டும்பூவும்போற்கலந்திருந்தார் (௱௬)

கலந்துவிடாய்தீரப் புனலாற்றியேகனகதனத்திறல் வெதுப்
புக்காட்டித்- துலங்கவிளையாடி யிருக்குநேரஞ்சூமனைசீதுதன்
பெரும்படைதான்,மலிந்தகடற்போல வளைந்துகொள்ள வள்ள
லுசைனேவல் வந்துசொல்ல,இலங்குமொருவேங்கைப்புலிக்குட்
டிபோ லெழுந்துதனை நாடிப்புறப்பட்டாரோ (௱௭)

ஆளன்படைபோர்க் கோலங்கண்டேயன்னநடையின்னார் மிக
ச்சலித்தே,ஞாலவிடிகண்ட மயிலதுபோற் கவ்வுமினைபோன பு
ள்ளதுபோல்,மீறுநெருப்பெல்லா மவர்வயிற்றிலிடிப்பத்திராவி
யழிந்தவர்போல்,நீறுநீக்குழன்மங்கை வருந்திவாடி நெடியோ
னவளிலேலதுவாயிரந்தார். (௱௮)

அரியபெரி யோனே தம்பிரானே ஆலமடங்கலும் படைத்த
கோவே,விரியும்புகழேந்தன் கணவருக்குவெற்றிவிரு தெல்லாங்
கொடுத்துக்காப்பாய்சருவுமெசீதுடபடையைவெட்டித்துயியா
விடத்திலே வந்தனுபோ,விளையுமறையசன்செல்வருனா யின்ன
மென்னுடன் கூட்டுவையே. (௱௯)

வரிசைமனைவியும் பெற்றதாயும் வல்லோனைவிலேதுவாவிர
ந்தார்,அருசிற்புலிமகன் விடைகொடுக்க அசனின்குமாரனார் கா

சீறுமே, பிரசத்துடனொரு கொடிப்புலிபோற் பேசும்படைக்களந்தனிற்புகுந்து, கரிசப்படையெல்லாம் கருவறுத்துக் கந்தனுதவிகொண்டார்ப்பரித்தார். (௱௰)

வேறு.

தலையறச்சிலபடைகள் உடலறச்சிலபடைகள் தாளகைமயிர்ப்படிமுறியவே, நிலையறச்சிலபடைகள் உறமறச்சிலபடைகள் திணைமறக்குறுதியெழவே, குலையறச்சிலபடைகள் குதியறச்சிலபடைகள் குடலறப்பதறிவிழவே, அலையறச்சிலபடைகள் கொடிவிழத்தனிபொருத ராசனளித்திடுகுமாரனே. (௱௰௧)

வேறு.

கடல்பெருகுஜலமிகுதி குமுகுமெனவிடமுமிழு சடியரவுநெறுநெறெனவே, படல்புலிகள்முழுதுநெரிபடவுருகியமுழுதுபடபடபடெனமுறைகளிடவே, கிடுகிடெனவிண்ணிசையுதிரதலைகள்பொலுபொலெனமலைகள்கிடுகிடெனநிலையசையவே, புடவியெமுகிழிதியெனவதிர அசனருள்குமாரர்படைபொருதகளவளமிதே. ()

வேறு.

முட்டாலெதிர்த்தவர்கள் பட்டேயடித்துவிழ முட்பாருருக்கவிழவே, கட்டாவயப்பரிசை பட்டாணிசொட்டைபணி சற்றேதெறித்துவிழவே, நெட்டாணிபெட்டியுமிணாத்தாருதுத்துமிகள் நெட்டூணியற்றியெழவே, கட்டாணிபெற்றஅசன் கட்டாருமெய்க்குமார் கட்டாண்மையுற்றகளமே. (௱௰௩)

தொங்கல்.

வகுத்தபடையெல்லாங்கொல்லக்கண்டு மற்றப்படையெல்லாங்கிட்டாமலே, யகத்திற்பயங்கொண்டுபுலியைக்கண்ட ஆட்டுக்கிடைபோல விரைந்தோடினார், ஒருத்துத்தவிராத அசன்மகனார்ஒருவரைப்பின்னங்கெதிர்த்திடாமல், ஜெகத்திற்பெரும்புகழ் தரித்தகோமான் சிறியதாதையை வந்துகண்டார், (௱௰௪)

மைந்தன்வரக்கண்டே யலிமகனார் மனதுக்ளிகூர்ந்து கொண்டாடியே, யெந்தன்மகனோ கண்மணியே எல்லாவெற்றியுமுமக்கேயென்றும், உத்தமனேயாட்டி தாயார்முன்போ யுள்ளசலிப்பெல்லா மகற்றுமென்றார், சிந்தைமகிழ்ந்து தாயாரைக்கண்டு தேவியார்பக்கலினிலுவந்தார். (௱௰௫)

வாடும்பயிராதுமழைகண்டாற்போல் மாண்டவுடல்தழைத்தெழுந்தாற்போல், தேடும்புருடனார்வரவுகண்டு சீர்பாதம்போற்றிப்பணிந்திருந்து, வேண்டாதனிற்பல்லிராற்றெனித்து விசிறியாற்றித்தான்கொண்டாடியே, வாடிபுனேசின்றவன்னைனதீரவந்தாத்தேபோழமென்றருகிருந்தார்: (௱௰௬)

அதிபுகழசன்செல்வர்காசி மருமைப்படைப்போரைப்பாடச்சொல்லி, மூதிரும்பொருளுரைக் கதையைச்சொல்லி முகில்போற்றிரவியக்கொடையுமீந்து, சதுரன்வருதைவாழ்மாலினவரி சயிதருமகம்மதுவமைந்தருளுறேன், கதிரும்பெரும்புகழிசுமாயீல்கான் கண்ணுபுலகினில்வாழிநாமே. (௱௰௭)

தேனுஞ்சீனியுங் கலந்ததுபோல்செய்யபுகழசன் திருமகனுங் காறும்புரிகுழ இசைசன்மகனுங் கலந்துவிளையாடி யிருக்குநேரம், ஈனன்பெரும்படை வளைந்ததென்றே யிலக்குமுகைசேனவல்வந்துசொல்ல, ஆணமனவியையினிருத்தி யடருப்படை நாடிப்புறப்பட்டாரே. (௱௰௮)

சின்னத்தகப்பனார் விடைகொடுக்கத் தீயசீனசிறுதன் படைக்களத்தே, தன்றுங்கடற்போலே வளைந்துலகள்ளத் தொல்லைப்படையெல்லாஞ்சூறையாடிச், சின்னப்படப்பட வெட்டிவெட்டிச் சேனைமுழுதுமே பிணக்காடாக்கி, வன்னப்புலிபோல நின்றாங்கு மறுத்தும்படைவந்து வளைந்ததுவே, (௱௰௯)

வேறு.

தோரணியற்றன மாவணியற்றன சேனைகளற்றனவே *
போரணியற்றன வானைகளற்றன பூசல்வயப்படையின் *
பேரணியற்றன முன்னணியற்றன பின்னணியற்றனவே *
சீரணியுற்றவி மாபுலிபோர் செய்தபடைக்களமேல் (௱௨௰)

ஆனைமுறிந்தன பூசனிவந்தன வாண்மைமுறிந்தனவே *
தானைமுறிந்தன வீறொடுவந்தவர் தாபமுறிந்தனவே *
சேனைமுறிந்தனமாவொடுவந்தவர் செல்விமுறிந்தனவே *
மானையுவந்தலிமாபுலிபோர் வதைத்தபடைக்களமேல் ௱௨௧)

தொங்கல்.

திரண்டபடையெல்லாங் கொல்லக்கண்டு செறிந்துவளைந்திடுஞ்சேனையெல்லாம், உருண்டுதலைவிழக் கொல்வாளென்றேயுதயந்தனைக்கண்ட பனியைப்போலே, வெருண்டுவெருண்டோடியொளித்ததனால் வெற்றியசன்மகனார்ப்பரித்தே, யருண்டநெடுந்தண்ணீர்த்தவனத்தோடே அலியார்மகன்றனைவந்துகண்டார்()

கண்டுசலாஞ்சொன்ன மகன்றனையே கண்ணேமணியேயென்கருகூலமே, பிண்டுமெசீதையே வெல்லதற்கு வெற்றிப்பாடெல்லாமுமக்கேயாகுந், தன்னுடையவியிரு இமதுதேவி சலிப்பையகற்றுமென்றுரைத்தாரப்போ, மண்டும்புகழ்த்தாயார் தமைக்கண்டுபின் மனைவியார்திருவிடத்தில்வந்தார் (௱௨௫)

புருடர்வரக்கண்டேயுசைன்மகளார் போனவுயிர்மீளவந்தவா
ருப், பரிவினுடன்போற்றி யிலிதிருத்திப்பாதம்பணிந்துகன்
கவிகூரவே - வரிசைத்துரையாமோ யாண்டகையே வாரும் அடி
யாள்தன் மணவாளனோ-பருமையுடனென்னைக்கொண்டவரேயடி
யாள்மனப்பிணிக்கருமருந்தே (௱௨௪)

வினையெனசிறுதன்படையைவெல்ல வெற்றியுமக்கல்லா மிகத்
தருவான்-ஆணிலழகரோவென்றுபோற்றி யருகேயிருந்தபூவணை
மீதிலே- பூணுமுடலுருமுயிரும்போல பூவுமதற்கான வண்டு
போல-காணும்படிவென்ற அசன்மகனார் கன்னிக்கரும்போடே
கலந்திருந்தார் (௱௨௫)

கலந்தங்கிறைவனைப்புகழ்ந்துபோற்றிக்காசிமகிழ்ந்துதானிரு
க்கும்போது-நலங்களறியாதவெசிதுபடைநாலைபோலவேவந்து
சூழ்ந்தார்-பெலங்கொளசன்மகன் படைக்குப்போகப் பிந்தா
தெழுந்தனரப்போதிலே-மலர்ந்தமல்லிகைபோன்றமாது மன்
னருசைன்மகளிதுசொல்லினார் (௱௨௬)

அல்லாவேசொல்லா லரியவனே அடியாளைக்கொண்டபாவமி
தோ-பொல்லாவினையிதுதீர்ந்திடாதோபுவியில்நித்தமுமிதுதொ
ழிலோ-நல்லார்க்குப்பொல்லான் எதிருமாண்டுநாகுக்கிரையாக
ப்போய்விட்டானே-எல்லாவினைகளுமனஞ்சலிப்புமெங்கள் தலை
யிலே வருவதென்னே (௱௨௭)

அன்னைபிதாவைத்தா னிகழ்ந்திட்டோமோஆரையாகிலுமடித்
திட்டோமோ-இன்னும்வழக்கோரஞ்சொல்லினோமோ எளியா
ருடைமையைப் பறித்திட்டோமோ-தன்னை மதிக்காமலிருக்கின்
றோமோ தானம்வழங்காமல்வாழ்ந்திட்டேமோ-என்னபொல்லா
ங்குதான்செய்தோமோஎங்கள்தமக்கிதுவருவதென்னே (௱௨௮)

படியிலனியாயஞ்செய்திட்டோமோபள்ளிதனில் வம்புபறை
ந்திட்டோமோ-மிடியருடைமையைத் தின்றிட்டோமோ வெய்
யசனுவுரைபேசினோமோ- நடையிலொருவரைப்பழித்திட்டோ
மோநடக்கைதப்பித்தானடந்திட்டோமோ இடையிலொருவரை
யிகழ்ந்திட்டோமோஎங்கள்தனக்கிதுவருவதென்னே (௱௨௯)

நிறைகுலம்பலஞ்செய்திட்டோமோ நீதிநெறிதப்பிநடந்திட்
டோமோ-கறைகெத்தவம்பு பறைந்திட்டோமோ கண்டாரி த
மையெல்லாம்வைதிட்டோமோ- மறைசூழ்புறம்பேசித் திரிந்தி
ட்டோமோ- மன்றிலிருவாரஞ் சொல்லிட்டோமோ - இறகுல்
கோத்திரந்தனிற்பிறந்தவெங்கள்தமக்கிதுவருவதென்னே ( )

அல்லவிதுபடக் காரியமோ அடியாள்தனக்காரும் பாக்கிய மோ-வல்லவினையெல்லாமெந்தனுடமன்னர்தலையிலேவருவதெ ன்னே-எல்லையுலகினில் இனியிருக்கேன் எந்தன் கணவனோயென்று ரப்போ-கல்லைநிகர்புயக் தசன்மகனார் கல்புதரியாமற்புலம்பலு ற்றார் (௱௯௧)

துங்கர் அலி மூன்று உலகமெல்லாந் துணிந்துபொருதுநின்ற டார்ந்தவெற்றி - எங்கள்தலையிலேவந்ததுவோ றப்பனுவுந்தான டைக்கலமாம் பங்கமிதுவெல்லாம்படவிதியோபடைத்தோனே யுன்றன்பாமெனவே-அங்கமுருகுதென் மனைவிதானுமடியேனு ஞ்செய்தபலனிதுவோ (௱௯௨)

மறுவொய்தில்லாத மனைவிதானு மணக்கப்பாய்மீதில்நானுங் கூடிச்-சிறிதுநாளின்னம்ஆசைதீரச் சிரித்துவிளையாடி யிருக்கவி ல்லைத்-தரையில்வருமிந்தப் பாடதெல்லாந்தனியேயோனையுன்றன் பரமதென்று-சறையொன்றறியாதமனைவியுடகண்ணீர்மாற்றமா வுசைசன்முன்வந்தே (௱௯௩)

சிங்கப்புலிபலிசெல்வனோ சிறியதந்தையேமாமனோ- எங்கள் தாயர்களு மனைவியர்க்குமெவர்க்குத்தலீவிதறைசெய்யவென்னும் றுங்கட்குரியவென்ன மானுக்கு நவனுநீர்துவாச் செய்யுமென்று பொங்கத்துடன்சொல்லிப்படைக்களம்போய்ப் புகுந்துபடை வெட்டத்தொடங்கினரே (௱௯௪)

வாரிக்கடல்போல வந்துவந்து வளைந்தபடையெல்லாங் கருவ றுத்துச்-சோரிப்புனலிலே மூழ்கிமூழ்கிச்சுற்றிச் சுற்றியேகுலை பாடி-மாரிக்கணம்போலக்குருதிபாயமலைகள்மலைகள்போற் பி ணங்குவிய-வீரத்துடன்வெட்டிப் பொருதுநின்றார் மீண்டும்ப டைவந்துவளைந்துவே (௱௯௫)

### கலிச்சந்தவிருத்தம்.

கொட்டமிடுதுட்டனர்கள் பட்டுயர்மலைக்கிணை குவிந்துடல் கிடந்ததொருபால்-கிட்டமருடத்தாசர் கட்டலகுசொட்டைகள் தெறித்தவைகிடந்ததொருபால்-வட்டமிடுபோற்புரவியத்தொடு திறந்தவர்மடிந்துருத லங்கதொருபால் துட்டமகல் வெற்றிபச ன் பட்சமுறுபுத்திரர் துணித்திடுசமர்க்களமிதே (௱௯௬)

திமிதமிடுசெக்குருதிதிணமொடு வழிந்தமிகுகொடலினோந் ததொருபால்விழுகண திருந்தனதிருந்தடியின் அடவிதொடும்வந் தவர்கள் மெலிந்துடல்கிடந்ததொருபால்-திமிதிமெனநடனமி டுவம்பரிகள்சிதறிடமுறிந்ததொருபால்-குழுமமிடுசிக்கமலியரு ள் அசனுவந்துபெறுகுமாரபடைவெற்றகளமேல் (௱௯௭)

## தொடர்கல்.

கதித்தபடையெல்லாங் கருவறுத்துக் காகப்பருந்துக்கு விரு
ந்திட்டுப்பின் மிகுத்துமிகுத்துவந் தடர்ந்தேறிய வெம்பவெம்ப
டைவந்து வளைதல்கண்டு-கதிக்குஞ்சுடர்வாளால் வெட்டிவெட்டி
க் களகமலைபோலப் பிணக்குவித்துத் - துவித்துப்பொருகின்ற
வேளையிலே தண்ணீர்த்தவனமாய் மெலிந்து நின்றார் (௱௩௮)

அந்தநேரத்தே யொருசேவகன் ஆனைதனைப்பூனை யடர்ந்தது
போற்-பந்தமாயுற்று மனந்துணிந்து பதுங்கிப்பதுங்கியே மெ
ள்ளவந்து-குந்தமதனாலே யசன்பாலனைக் குத்தினானவர் விழுந்
தார்கண்டே-யுந்துவாம்பரி தனிலேறியே யோங்குபுகழுசை
னோடிவந்தே (௱௩௯)

அசனிக்குயரைப் பொருதவனை யலியாரிமகனுசைன் கொ
ன்றுபோட்டு-குசையின்குதிரைமேற் காசீம்தம்மைக் குறையினு
யிரோடுகொண்டுவந்தார்-திசையின்மனுவெல்லாஞ் சூழ்ந்திருக்க
த்திருக்கூடாரத்தினிலேதுவைத்தார்-இசையின்குயில்மொழி மனை
வியொரும் இயப்புந்தாயாரு மோடிவந்தார் (௱௪௰)

அரியமகனோ கண்மணியே அலியார்பேரனே யசன்மகனே
உரியகிளைக்கெல்லா மணிவிளக்கே யுவரியுலகாளும் நாயகமே-
பெரியதவம்பண்ணிச் சுமந்திருந்து பெற்றுவளர்த்தவென் பல
னிதுவோ-தெரியுமறைவேந்தர் குலக்கொழுந்தே சிறியவுமக்கி
து வந்ததென்னே (௱௪௧)

ஐயகோபெற்று நான்வளர்த்த வருமைத்தலைவனே யெம்மர
சே-செய்யதகப்பன்தாய்செய்ததெல்லாஞ் செல்வர்தலையிலேவ
ந்ததுவோ - வையமெலிதுக்கு நான்வளர்த்த பாலன்தானென்ன
செய்தானோன்றே-கையைநெரித்தேங்கியழுதார்கண்டேசெருதுமனை
வியார் புலம்பலுற்றார் (௱௪௨)

கலங்கியிரவில்நான் கண்டகனாக் கைமேற்பலனாக வந்ததுவோ
விலக்கவழிசற்று மங்கிலையோ வேண்டாவினையென்ன திரும்பிலை
யோ-பலங்களறியாத வெறுமெயிது பழிகாரன்கையி லகப்பட்
டேரோ-இலங்குந்திருமேனி பழுதாயிற்றே யித்தப்பெரும்பழிவ
ருவதென்னே (௱௪௩)

குடியில்லாத வீடாயினனே கோவில்லாதவூராயினனே-விடி
யில்லாப்பகலாயினனே வெயிலில்லாப்பயிராயினனே-பொடி
யில்லாமிடி யாயினனே பொழுதில்லாப்பக லாயினனே அடியி
ல்லாக்கிளை யாயினனேயடிபாட்டுகெல்புத்தி நாயகமே (௱௪௪)

குற்றமயிதுதானே மணவாளனே கூப்பிடுஞ் சத்தங்கேட்கிலை
யோ-வெற்றிக்கணவனோ யெனைத்தனிய விட்டுநீர்சொல்லல் தகு

 222332

மோசநத்துமுறைமைவிட்டிங் கிருக்கமாட்டேன் நானுங்கூட வ வருவேன்கண்டீர்-கற்றமறைவழு வடியாளிம்மயற் கையை நான்வைத்துச் செலுத்தகுமோ (௱௪௫)

உமக்குப்பின்னை நான் வருவதுமெய் உம்மைத்தேடியே திரி யமாட்டேன்-எமக்குநீரன்றி வேறில்லையே எங்கேயிருப்பீரோவ றியேனியான் - அமைக்குஞ்சுவர்க்கத்தில் நீரிருக்கும் அடையா ளந்தனைச் சொல்லுமென்றார்-சமர்க்குப்புலியான அசன்மகனார் தற்றே திருவுளம்பற்றிலரோ (௱௪௬)

மனையிற்கிளியாக வாய்த்தவரோவல்லோன்விதிதனை விலக்கலா மோ,தனியனொருவனேசாகாதவன் சகலஜனங்களுஞ்சாவார்கண் டீர்,இனியின்பரிதாய்நா னிருக்குந்தல மிறசூல் முகம்மதைக்கே ட்டாற் சொல்வார்-மனதின்கருணையீர் சுவர்க்கத்திலே வந்தாலவ ரிதம்மைக் கேளுமென்றார் (௱௪௭)

சங்கையினர்சொல்லக்கிளிமொழியார்தம்பிரான்தோழர்தமை யுங்கேட்பேன் - உங்கள்தமைதினைந் தனுகவேண்டு முறுதியடை யாளங்காட்டுமென்றார்-ரங்கைகொடுசட்டை தனைக்கீறியிவ் வடை யாளங்கண்டேவருவீரென்றார் - மங்கையருந் தண்ணீர்தவனத் தோடே வானந்தனைக்கண்ணால் நோக்கினரோ (௱௪௮)

அழுதத்தருள்நோக்கவாகாசத்திலப் பார்க்கனப்பெண்ணனே வங்கோடி.-அமுதப்பானக்க மேந்திக்கொண்டே யழகுவடிவையு ங்காட்டிக்காட்டி யெமது பெருமானே நீரமக்காம் இந்தப்பா னக்கம் உமக்கேயாகும்-கமறும்புவித்தண்ணீருமக்குவேண்டாம் கடுகவாருமென் றழையாநின்றார் (௱௪௯)

விண்ணின்மடவார்நின் றழைத்தகாலை வெண்ணெயிதனில்மு டிவாங்குமாப்போல் - அண்ணலிசுறயீல் வந்துகாசீம் ஆவித னைமெள்ள வாங்கிப்போனார்-எண்ணுமனுவுடன் மனைவியாருமீ ன்றதாயாரு முறவுள்ளோரும் - பண்ணைகுலைந்ததையோ கோவெ னவேபதறிப்பதறியே யழுதின்றார் (௱௫௰)

அழகைமாற்றியே அலிமகனார் அசனின்குமாரரா கபூறுதன் னில்-தொழுதுபோற்றியே யினிதடக்கித்துலக்குமதற்கான சட ங்குஞ்செய்து-முழுதுமுடையவ னருளாகவே முறைமைநெறிதீ தி தவறாமலே - செழுமையுடன்செங்கோல் முறைநடத்திச் சிங் காசனத்திலே வீற்றிருந்தார். (௱௫௧)

காசீப்படைப்போர்-முற்றுப்பெற்றது.